# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>பத்திர பதிவு செய்து கொடுக்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய சார்பதிவாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் தனிநபருக்கு 1 வருடம் கடுங்காவல் சிறை</u>

புகார்தாரர் திரு.ராஜேஸ்கண்ணன், எண்.1816, அய்யம்பட்டி முள்ளூர் அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய பெயரிலும் தன்னுடைய தங்கையின் பெயரிலும் பத்திரப்பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலம்-2, புதுக்கோட்டை மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். பத்திரப்பதிவு செய்து கொடுக்க திருமதி.சசிகலா, சார்பதிவாளர், புதுக்கோட்டை மற்றும் திரு.நரசிம்மன், தனிநபர் ஆகியோர் தங்களுக்கு ரூ.8,000/- லஞ்சமாக கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, புதுக்கோட்டை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை 07.09.2012ம் தேதி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.சசிகலா, சார்பதிவாளர், அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.8,000/- பெற்று திரு.நரசிம்மன், தனிநபர் வசம் கொடுத்தபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கானது புதுக்கோட்டை முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 05.05.2025 அன்று திருமதி.சசிகலா, முன்னாள் சார்பதிவாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.8,000/- அபராதமும், திரு.நரசிம்மன், தனிநபருக்கு 1 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.3,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.